THENI IAS ACADEMY –FREE COACHING FOR TNPSC GR -IV

THENI IAS ACADEMY

*AKILA JEWELLERY BACKSIDE,THENI.*

*CELL-9976626064,9543064238*

**FREE COACHING FOR TNPSC GR -1V**

**தேர்வு முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகள் - வரலாறு**

***(புதிய புத்தகத்தின் படி தயாரிக்கப்பட்டது)***

## 2.குப்தர்களின் காலம்

**முக்கியச் சான்றுகள்** -

- குப்தர்களால் வெளியிடப்பட்ட தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள்
- சந்திரகுப்தரின் அலகாபாத் கல்வெட்டு(33 வரிகள் , நகரி வரிவடிவம்,சமஸ்கிருதம்) – பொறித்தவர் ஹரிசேனர்
- மெக்ராலி இரும்புத் தூண்( முதலாம் சந்திர குப்தர்)
- இரண்டாம் சந்திரகுப்தரின் உதயகிரி குகைக் கல்வெட்டு , மதுரா பாறைக் கல்வெட்டு , சாஞ்சி பாறைக் கல்வெட்டு
- ஸ்கந்த குப்தரின் பிதாரி தூண் கல்வெட்டு
- கத்வா பாறைக் கல்வெட்டு
- மதுபான் செப்புப் பட்டயம்
- சோனாபட் செப்புப் பட்டயம்
- நாளந்தா களிமண் முத்திரைப் பொறிப்பு

**இலக்கியச் சான்றுகள் -**

- விஸ்ணு , மத்சய, வாயு ,பாகவத புராணங்கள் , நாரதரின் நீதி சாஸ்திரம்
- விசாக தத்தலின் தேவிச்சந்திர குப்தம் , முத்ரா ராக்சஸம் , பாணரின் ஹர்ஸ சரிதம்
- காளி தாசரின் நாடகங்கள்
- பாகியானின் பயணக் குறிப்புகள்( 2-ம் சந்திர குப்தர்)
- ஹர்ஸரின் ரத்னாவளி , நாகநந்தா , பிரியதர்ஸிகா
- யுவான் சுவாங்கின் சி-யு-கி
- குஸாணர்களின் வீழ்ச்சிக்குப்பின், மிக நீண்ட இடைவெளிக்குப் பின்பு தோன்றிய பேரரசு ஆகும்.
- நிறுவியவர் - **ஸ்ரீ குப்தர்**
  காலம் - நான்காம் நூற்றாண்டு
  தலைநகரம் - பாடலிபுத்திரம் (பாட்னா)
  தற்போதைய பீகார் , வங்காளம் பகுதிகளை ஆண்டார்
  முதன் முதலில் நாணயங்களில் இடம்பெற்ற உருவம் இவருடையது ஆகும்
- ஸ்ரீகுப்தரின் மகன் - **கடோத்கஜ குப்தர்**
  கடோத்கஜ குப்தர் மகாராஜா (மன்னன்) என்ற அந்தஸ்தோடு திருப்தியடைந்தார்.

**ADMISSIONS GOING ON FOR PG TRB TAMIL ,ENGLISH ,CHEMISTRY**

- **முதலாம் சந்திரகுப்தர் (கி.பி.319 – 335)**
  1. குப்தப் பேரரசின் மிகச்சிறந்த முதல் பேரரசர் இவர்.
  2. அயோத்தி (சாகத்), அலகாபாத்(பிராயகை) மற்றும் மகதத்தை உள்ளடக்கியப் பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
  3. லிச்சாவி **இளவரசி குமார தேவியை** மணந்தார்.
  4. லிச்சாவி மரபு என்பது வைசாலியை ஆண்டு வந்த மரபு(பழமையான கன சங்கங்களில் ஒன்று.இதன் ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாளத்திற்கும் இடைப்பட்ட பகுதி ஆகும்.
  5. இவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் சந்திரகுப்தர் மற்றும் குமாரதேவி ஆகியோரின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.
  6. நாணயங்களில் லிச்சாவையா என்ற வாசகமும் இடம்பெற்றிருந்தன.
  7. நாணயத்தில் உருவம் பொறிக்கப்பட்ட முதல் இந்திய இளவரசி குமாரதேவி ஆகும்.
  8. **குப்தசகாப்தம்** என்பது கி.பி.320 பிப்ரவரி முதல் ஆகும்.
- **முதலாம் சமுத்திரகுப்தர் (கி.பி.335 – 375)**
  1. இவர் இந்திய நெப்போலியன் என அழைக்கப்படுகிறார்.
  2. இந்திய நெப்போலியன் என அழைத்தவர் **வின்சென்ட் ஸ்மித்**.
  3. செய்யுள்கள் பல எழுதியதால் கவிராஜா என்ற பெயரையும் பெற்றார்.
  4. மகாராஜாதிராஜன் எனவும் அழைக்கப்பட்டார்.
  5. இவரைப் பற்றி அறிய உதவும் கற்றூண் - அலகாபாத் கற்றூண்
  6. அலகாபாத் கற்றூணில் சந்திரகுப்தரைப் பற்றி விவரித்தவர்- ஹரிசேனர் .அது பிராயகை மெய் கீர்த்தி(பிரசஸ்தி)ஆகும்.
  7. **ஹரிசேனர்** சந்திரகுப்தரின் படைத்தலைவர் ஆவார்.
  8. இவரது படையெடுப்பு வடக்கிலிருந்து தற்போதைய காஞ்சிபுரம் வரை தொடர்ந்தது. காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் **விஷ்ணுகோபனை** சிறைபிடித்தார்.
  9. வட இந்தியாவில் 9 அரசுகளைக் கைப்பற்றினார்.
  10. தென்னிந்தியாவில் 12 அரசர்களை தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசுகளாக்கி கப்பம் கட்ட வைத்தார்.
  11. கிழக்கு வங்காளம் அஸ்ஸாம் நேபாளம் பஞ்சாபின் கிழக்குப் பகுதி அரசர்களும் மற்றும் ராஜஸ்தானைச் சார்ந்த பழங்குடியினரும் இவரது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்
  12. நாணயங்களில் காணப்பட்ட அவரது **வீணை** வாசிப்பது போன்ற உருவம் அவருக்கு **இசையில் இருந்த ஆர்வத்தை உணர்த்துகிறது.**
  13. **இவரது ஆட்சிக்காலத்தில் தான்** இலங்கை மன்னன் **மேகவர்மன்** தனது தூதுவரை அனுப்பி புத்த கயாவில் விஹாரம் அமைக்க அனுமதி வேண்டினான்.
  14. இவருக்குப்பின் இவரது மகன் **ராமகுப்தர்** கி.பி.375 ல் ஆட்சிப் பொறுப்பேற்றார். ராமகுப்தர் தனது இளைய சகோதரன் இரண்டாம் சந்திரகுப்தரால் கொல்லப்பட்டார்.
- **இரண்டாம் சந்திரகுப்தர் (விக்கிரமாதித்யன்) - கி.பி.380 – 415**

  1.இவர் விக்ரமாதித்யன் எனவும் அழைக்கப்படுகிறார்.

  2.இவர் சாகர்களை வென்றதால் **“சாகரி”** என்ற புனைப்பெயரும் பெற்றார்.

  3. சாகர்கள் மேற்கு மாளவம் மற்றும் கத்தியவாரை(குஜராத்) ஆண்டு வந்தவர்கள்.

  4. சாகர்களை வென்றதால் புரோச், காம்பே, சோபரா என்ற மூன்று துறைமுகங்கள் கிடைத்தன.

ADMISSIONS GOING ON FOR PG TRB TAMIL ,ENGLISH ,CHEMISTRY

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

5. இவரது மகளை மணந்த வகாதக அரசன் **இரண்டாம் ருத்ரசேனர்** மறைந்ததால், வகாதக அரசையும் மறைமுகமாக கட்டுப்படுத்தினார்.
6. இவரது அவையில் இருந்த முக்கியப் புலவர்கள் காளிதாசர் மற்றும் அமரசிம்மன் ஆவர்.
7. காளிதாசர் இந்தியாவின் ஷேக்ஸ்பியர் என அழைக்கப்படுகிறார்.
8. இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் தான் சீனப் பயணி பாகியான் இந்தியா வந்தார்.
9. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சி இங்கிலாந்தை ஆண்ட **முதலாம் எலிசபெத்** மற்றும் முகலாயப் பேரரசர் 'ஷாஜஹானின் ஆட்சியோடு ஒப்பிடப்படுகிறது.
10. இவரது இரண்டாவது தலைநகரம் உஜ்ஜயினி.
11. திருமண உறவுகள் மூலமும் நாட்டை விரிவுபடுத்தினார்.
12. இவர் விஷ்ணுவின் சிறந்த பக்தராவார்.
13. இவரது காலத்தில் தான் பாடலிபுத்திரம் மெருகூட்டப்பட்ட அழகிய நகராக மாறியது.
14. டெல்லிக்கு அருகிலுள்ள இவரது காலத்திய **மெஹ்ருளி இரும்புத்தூண்** உருக்குக் கலைக்கு சிறந்த உதாரணம் ஆகும்.
15.குபேரநாகா மற்றும் துருபசுவாமினி ஆகிய இருவர் இரண்டாம் சந்திரகுப்தரின் அரசியர் ஆவர்

**இரண்டாம் சந்திரகுப்தரின் சிறப்புப் பெயர்கள் -**

சிம்மசந்திரர் , நரேந்திர சிம்மர் , விக்கிரம தேவராஜர் ,தேவகுப்தர் , தேவஸ்ரீ , சிம்ஹ விக்ரமன் தேவராஜா , பரம்பாகவதா

**குமார குப்தர் (கி.பி.415 -456)**

1. இவர் இரண்டாம் சந்திரகுப்தரின் மகன் ஆவார்.
2. **மகேந்திராதித்யா** மற்றும் சக்ராதித்யா என்ற சிறப்பு பெயரும் உண்டு.
3. நாளந்தா பல்கலையைத் தோற்றுவித்தவர் இவரே.
4. இவரது ஆட்சியில் புஷ்யமித்திரர்கள் என்ற பழங்குடியினரால் குப்த படை தோற்கடிக்கப்பட்டது.

- **ஸ்கந்த குப்தர் (கி.பி.456-468)**

**1.**இவரது காலத்தில் தான் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஹீணர்கள் படையெடுத்தனர். ஹீணர்கள் கொடூர குணமுடையவர்கள்.

2.ஸ்கந்த குப்தர் ஹீணர்களை வென்றார்.

3.குப்தப் பேரரசின் கடைசி பேரரசர் ஸ்கந்த குப்தர்

4.குப்தப் பேரரசின் கடைசி அரசர் விஸ்ணு குப்தர்(கி.பி 540 – 550)0

ADMISSIONS GOING ON FOR PG TRB TAMIL ,ENGLISH ,CHEMISTRY

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com